CP. 21/2015
26-09-2023

M.W.1 அம்மு
குறுக்கு விசாரணை

இவ்வழக்கு தொடர்பான அனைத்து விபரங்களும் நன்கு தெரியும் என்ற அடிப்படையில் இந்நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரி. நீங்கள் உங்கள் பிரமாண வாக்குமூலத்தில் 31.12.2013-ம் தேதி அன்று பணியில் சேர்ந்ததாக் தெரிவித்துள்ளீர்கள் என்றால் சரி. நீங்கள் பணியில் சேரும் போதே மனித வளத்துறை துணை மேலாளராக பணியில் சேரவில்லை என்றால் Assistant Manager ஆக சேர்ந்தேன். நீங்கள் 1-வது எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி என்று நிரூபண வாக்கு மூலத்தில் தெரிவித்துள்ளீர்கள், நீங்கள் பேச்சு வார்த்தை நடந்த சமயத்தில் நேரடி சாட்சி அல்ல என்றால் நான் நேரடி சாட்சி தான். உங்களது நிறுவனம் கூட்டுறவு சங்கம் பதிவு சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட நிறுவனம் என்றால் சரி. இச்சேவை திட்டத்திற்கான 100% நிதியினையும் தமிழக அரசே செலவிடுகிறது என்றால் வழக்கிற்கு சம்பந்தம் இல்லாதவை. வழக்கிற்கு சம்பந்தம் இல்லாதவை என்ற போது உங்கள் நிரூபண வாக்குமூலத்தில் ஏன் போட்டுள்ளீர்கள் என்றால் மனுவிற்கு சம்பந்தம் இல்லாதவை என்பதால் அவ்வாறு சொன்னேன். உங்களது நிறுவனம் ஒரு ரூபாய் மூலதனம் போடாமல் இச்சேவையை நிர்வகித்து வருகிறது என்றால் தமிழக அரசும் EMRI GHS என்ற தனியார் நிறுவனமும் PPP (Private Public Partner) என்ற ஒப்பந்தத்தின் அடிப்படையில் செயல்படுகிறது. அந்த ஒப்பந்தத்தின் நகல் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் இந்த வழக்கிற்கு சம்பந்தமில்லை அதனால் தாக்கல் செய்யவில்லை. உங்கள் நிறுவனம் ஒரு லாபநோக்கமற்ற நிறுவனம் அல்ல என்றால் சரி. 108 ஆம்புலன்ஸ் தொழிலாளர் சங்கத்தின் 33 கோரிக்கைகள் அடங்கிய தொழிற்தாவாவின் பேச்சுவார்த்தை சென்னை தொழிலாளர் ஆணையர் அலுவலகத்தில் 2013-ம் ஆண்டு முதல்

நடைபெற்று வந்தது என்றால் தவறு அப்பேச்சுவார்த்தையின் தொடர்ச்சியான 22.04.2014-ல் ஊதிய உயர்வு தொடர்பான கோரிக்கையில் 2014-ம் ஆண்டுக்கான ஊதிய உயர்வு அனைத்து EMT, PILOT, ERO's ஊழியர்களுக்கும் சீராக 10 சதவீதம் ஊதிய உயர்வு வழங்கப்பட்டது என்றால் சரி. மேலும் அப்பேச்சுவார்த்தையில் வரிசை எண் 5 ல் ஒப்புக்கொண்டபடி ஊக்கத்தொகை ரூ.400/- வழங்கிட Proposal 07.08.2014-ம் தேதி அன்று 2 வது எதிர்மனுதாரருக்கு 1-வது மனுதாரரால் கடிதம் வாயிலாக அனுப்பப்பட்டது என்றால் சரி. 2008-ம் ஆண்டு முதல் 2013-ம் ஆண்டு வரை களப்பணியாளர்களுக்கு ஊதிய உயர்வு 10% அரசு வழங்கியுள்ளது என்றால் அவரவர் பணியின் சிறப்பை பார்த்து 10,8,6.... ஆக Proportionate ஆக வழங்கப்பட்டு வருகிறது. 2014-ம் ஆண்டு ஊதிய உயர்வான 10% முதல் 15% ஆக உயர்த்தி வழங்கிட கோரியதில் அதில் 10% ஊதிய உயர்வினை 22.04.2014-ம் அன்று நடைபெற்ற பேச்சு வார்த்தையில் எதிர்மனுதாரர் ஒப்புக்கொண்டபடி அனைவருக்கும் சீராக வழங்கப்பட்டது என்றால் ஊதிய உயர்வு சம்பந்தமான வழக்கு இந்த வழக்கு கிடையாது. உங்களது நிரூபண வாக்குமூலத்தில் வரிசை எண் 13-ல் 1-வது எதிர்மனுதாரர் பேச்சுவார்த்தையில் ஒப்புக் கொண்டது போல் 2014-2015 நிதியாண்டிற்காக ரூ. 4,800/- யை தகுதியுடைய அனைத்து ஊழியர்களுக்கும் ஒப்புக் கொண்டதன் அடிப்படையில் இரு தவணைகளா வழங்கியது என குறிப்பிட்டுள்ளீர்கள் அவை 2014 ஏப்ரல் மாதம் முதல் 2015 மார்ச் மாதம் வரையுள்ள ஊக்கத் தொகை என்றால் சரி. அப்பேச்சுவார்த்தையானது 22.04.2014 அன்று உங்கள் எழுத்துப்பூர்வமாக தொழிலாளர் ஆணையர் அலுவலகத்தில் வழங்கிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ள சரத்தின் படி தான் என்றால் சரி. தொழிற்சங்கத்தின் போனஸ் கோரிக்கை தொர்பாக 17.10.2014 அன்று நடைபெற்ற பேச்சுவார்த்தையில் நீங்கள் கலந்து கொண்டுகையொப்பம் போடவில்லை என்றால் கலந்து கொண்டு கையொப்பம் போடவில்லை. 17.10.2014-ம் தேதியிட்ட ஒப்பந்தத்தில் ஒரு வருட

சர்வீஸ் குறைவாக உள்ளவர்களுக்கு 12 மாத விகிதாசாரப்படி வழங்கப்படும் என்பது, ஒப்பந்த தேதிக்கு முன்பு உள்ள ஓர் ஆண்டிற்கான 12 மாதங்களின் சராசரி என்றால் நிதியாண்டை குறிப்பிடுகிறது. 17.10.2014-ம் தேதியிட்ட ஒப்பந்தத்தில் எந்தவொரு இடத்திலும் 2014-2015-ம் நிதியாண்டிற்கான ரூ.4800 என்றோ ஊக்கத்தொகை என்றோ குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல, குறிப்பிடப்பட்டுள்ளது. ஊக்கத் தொகை என்பது வேலை நிறுத்த அறிவிப்பிற்கு முன்பாகவே ஏற்கனவே ஒப்புக் கொண்ட விஷயம் என்றால் சரியல்ல. இது போனஸ்க்கான வேலை நிறுத்த அறிவிப்பே தவிர ஊக்கத் தொகைக்காக அல்ல என்றால் சரி. ஏற்கனவே பேசி முடிக்கப்பட்ட ஊக்கத் தொகை கோரிக்கைக்காக வேலை நிறுத்த அறிவிப்பு வழங்க வேண்டிய அவசியமில்லை என்றால் ஊக்கத்தொகை சம்பந்தமான பேச்சுவார்த்தையே கிடையாது. ஏற்கனவே மாதமாதம் வழங்க வேண்டிய ஊக்கத்தொகையை வழங்கிவிட்டு 17.10.2014 தேதியிட்ட ஒப்பந்தப்படி வழங்க வேண்டிய தொகை ரூ.4800/- (Lumpsum) வழங்கவில்லை என்றால் சரியல்ல. ஒப்பந்த ஷரத்துக்களிலோ அல்லது பேச்சு வார்த்தை குறிப்புகளிலோ ஊக்கத்தொகை பெற்றுக்கொள்கிறோம் என்று குறிப்பிடப்படவில்லை என்றால் 17.10.2014-ம் தேதி ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தத்தில் போனஸ் வழங்க இயலாது ஊக்கத்தொகை வழங்குகிறோம் என்று தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. அதற்கான ஆவண ஆதாரம் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் தாக்கல் செய்துள்ளோம். தமிழக அரசிடமிருந்து 2014-ம் ஆண்டுக்காக ஊழியர்களின் ஊக்கத்தொகைக்காக ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு என்றால் சரியாக தெரியவில்லை. 108 ஆம்புலன்ஸ் சேவைக்கான தொகை எந்தெந்த செலவீன அட்டவணையின் கீழ் பெற்றுக் கொள்ளப்படுகிறது என்றால் 2014-ம் ஆண்டு தான் முதன் முதலாக ஊக்கத்தொகையே வழங்கப்பட்டது. மனுதாரர்களின் PL (Privilage leave) விடுமுறையானது ஒவ்வொரு ஏப்ரல் மாதம் முதல் மார்ச் மாதம் வரையிலான நிதியாண்டுகளில் பணிபுரிந்து சம்பாதித்த விடுப்பு என்றால் நிதியாண்டில் வேலை

செய்தவர்களுக்கு 15 நாட்கள் நிறுவனம் கொடுக்கும் விடுமுறை. அத்தகைய PL விடுமுறையானது ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் 1–ம் தேதி அன்று மனுதாரர்களின் சம்பள பட்டியலில் 15 நாட்கள் சேர்க்கப்படுமென்று உங்களது பதிலுரையில் கூறியுள்ளது உண்மையா என்றால் சரி. PL (Privilage leave) விடுமுறை நாட்களுக்கு மாற்றாக தொழிலாளர்களுக்கு சம்பளம் வழங்கப்படுமென்றும் அவை ஆண்டுக்கு ஒரு முறை மட்டும் விண்ணப்பித்து பெற்றுக் கொள்ளலாம் என தங்களது பதிலுரையில் தெரிவித்திருப்பது உண்மையா என்றால் முன்னர் நடைமுறையில் இருந்தது தற்போது இல்லை. 2014– ஏப்ரல் முதல் 2015 மார்ச் வரை முன்னறிவிப்பு இன்றி மனுதாரர்களின் சம்பள பட்டியலிலிருந்து (Salary slip) EL, PL விடுமுறைகளை (Paid Holidays) நீக்கம் செய்யப்பட்டுள்ளது என்றால் தவறு. அவ்வாறு முன்னறிவிப்பு இன்றி EL, PL விடுமுறைகளை நீக்கம் செய்ததோடு விடுமுறை பட்டியலில் உள்ள நாட்களை குறைத்து வழங்கியது மனுதாருக்கு இழைக்கப்பட்ட அநீதி என்றும் அவை சட்ட விரோதம் என்றால் அவ்வாறு எதுவும் நடக்கவே இல்லை. மனுதாரர்க்கு முன்னறிவிப்பு இன்றி சம்பள பட்டியலிலிருந்து EL, PL விடுமுறைகளை (Paid Holidays) நீக்கல் செய்து மனுதாரர்கள் பணி செய்ய அழைப்புக்காக காத்திருக்கும் நாட்களுக்கும் சேர்த்து மனுதாரர்களுக்கு தெரியாமலேயே EL, PL விடுமுறைகளை (Paid Holidays) விடுமுறை பட்டியலில் இருந்து கழிக்கப்பட்டுள்ளது என்றால் அந்தமாதிரி எந்த தொழிலாளர்களும் கிடையாது. ஒரு ஆம்புலன்ஸ்க்கு ஒரு EMT மற்றும் ஒரு பைலட் பணி பார்ப்பார்கள் என்றால் சரி. கூடுதலான பணியாளர்களை பணி பார்க்க வாய்ப்பில்லை என்றால் சரி. அவ்வாறு இருக்கையில் கூடுதலான பணியாளர்களுக்கு நீங்கள் வேலை கொடுக்காமல் காத்திருப்பவர்கள் PL, EL –யை கழிப்பது சரியா என்றால் அந்த மாதிரி கூடுதலான பணியாளர்களே கிடையாது. பணி ஒதுக்கீடு செய்யப்பட்ட EMT மற்றும் பைலட் வராத போது மாற்றுப்பணி செய்ய பணியாளர்கள் உண்டு என்றால் ரிலீவர் என்று

Arasu

மாற்றுப்பணியாளர்கள் உண்டு. 3 வண்டிக்கு ஒரு ரிலீவர் என்றும் மாவட்டத்திற்கே டிஸ்ட்ரிக்ட் ரிலீவர் என்ற நபரும் இருக்கிறார்கள் என்றால் சரிதான். மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்துள்ள இணைய வழி கணிணி பட்டியல் Ex. P. 6 ஆவணத்தில் முன்னறிவிப்பு இன்றி EL, PL விடுமுறைகள் கழிக்கப்பட்டுள்ளது என்றால் அந்த குறிப்பிட்ட நபர் எடுத்த விடுப்பை கழித்து கொடுக்கப்பட்டுள்ளது. Ex. P. 6 ஆவணத்தில் நீங்கள் சொல்லும் படி உள்ள நபர்களுக்கு அவர்கள் விடுமுறை எடுத்ததையும் அவர்கள் பணமாக பெற்றுக்கொண்டதையும் பற்றி விபரங்கள் என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன். விடுமுறை எடுத்திருந்தால் பட்டியலில் அவர்களின் அடையாள எண் குறிப்பிடப்பட்டிருக்கும் என்றால் சரிதான். அவ்வாறு இந்த பட்டியலில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல, குறிப்பிடப்பட்டுள்ளது. நீங்கள் சொல்வது உண்மையானால் அந்த பட்டியலில் விடுமுறை எடுத்த நாட்கள் போக மீதமுள்ள நாட்கள் உடன் நடப்பு ஆண்டு சம்பந்தப்பட்ட விடுமுறை நாட்களும் சேர்ந்து கணக்கில் எடுத்துக்கொண்டு போட்டிருக்க வேண்டும் ஆனால் அவ்வாறு இல்லை என்றால் அவ்வாறு தான் கணக்கிடப்பட்டு போடப்பட்டுள்ளது குறைவாக காணப்பட்டால் அந்த நபர் விடுமுறை எடுத்திருக்க கூடும் அல்லது பணமாக பெற்றிருக்ககூடும். அதற்கான விளத்தினை என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் தாக்கல் செய்துள்ளேன். இராமலிங்கம் என்ற பணியாளருக்கான பட்டியலில் 2 நாட்கள் Lapse ஆகி விட்டது என்ற குறிப்பை பற்றி என்ன சொல்கிறீர்கள் என்றால் ஒரு பணியாளருக்கு 45 நாட்கள் மட்டும் தான் தகுதிக்கு உட்பட்ட நாட்களாக எடுத்துக்கொள்ள முடியும். வ.எண் 17–ல் PL விடுப்பு சலுகை ஊதியம் பெற தகுதியற்றவர்கள் என சிலரை குறிப்பிட்டு உள்ளீர்கள் அவர்களின் தகுதி பெற அற்றவர்கள் என்பதற்கான ஆவணங்கள் எதனையும் சமர்ப்பிக்கவில்லை என்றால் தாக்கல் செய்யவில்லை தேவைப்பட்டால் தாக்கல் செய்கிறேன். நீங்கள் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் உண்மைக்கு புறம்பான

Advocate

சங்கதிகள் போட்டு எதிர்மனுதாரருக்கு ஆதரவாக தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. மனுதாரர்கள் ஆகிய தொழிலாளிகள் யாரும் 2014–ம் ஆண்டிற்கான ஊக்கத்தொகையை வாங்கவில்லை என்றும் PL விடுமுறையை சம்பள பட்டியலில் இருந்து தன்னிச்சையாக 2014–ம் நிதியாண்டிற்கு நீக்கி அதன் பலனை மேற்சொன்ன தொழிலாளர்களுக்கு வழங்காமல் இருந்துள்ள படியால் மனுதாரர்களின் மனுப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

**சாட்சி திறந்த நீதிமன்றத்தில் கூறப்பட்டது கணிணியில் தட்டச்சரால் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்து காண்பித்து அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டது.**

**தலைமை தாங்கும் அதிகாரி,**
**தொழிலாளர் நீதிமன்றம்,**
**திருச்சி**